# மெட்ரோ ரயிலில் 8 மாதத்தில் 1.91 கோடி பேர் பயணம்

**சென்னை:** சென்னை மெட்ரோ ரயிலில் கடந்த ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை 1.91 கோடி பேர் பயணம் செய்துள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து ஷேர் ஆட்டோ, ஷேர் டாக்ஸி, அரசு மினி பேருந்து, டெம்ப்போ டிராவலர் சேவைகளை பயணிகளுக்கு அளித்து வருகிறது. இதன் காரணமாக, மெட்ரோ ரயிலில் பயணம் செய்வோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

கடந்த ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை 1.91 கோடி பயணிகள் மெட்ரோ ரயிலில் பயணம் செய்துள்ளனர். அதிகபட்சமாக ஆக.14-ம் தேதி 1.15 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர். ஆக.9-ல் 1.14 லட்சம் பேரும், ஆக. 28-ல் 1.12 லட்சம் பேரும் பயணம் செய்துள்ளனர். மேலும், கடந்த மாதம் 19 நாட்களில் தினமும் 1 லட்சத்துக்கும் மேற்பட்டோர் மெட்ரோ ரயிலில் பயணம் செய்துள்ளதாக மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.